| Article Date | Headline / Summary | Publication |
| --- | --- | --- |
| 23 Aug 2026 | 'No Claim Bonus' in Motor Insurance... A super choice that reduces premiums! | Nanayam Vikatan(Tamil) |

## மோட்டார் இன்ஷூரன்ஸில் ‘நோ க்ளெய்ம் போனஸ்’... பிரீமியத்தைக் குறைக்கும் சூப்பர் சாய்ஸ்!

ராகேஷ் கவுல், தலைமை விநியோக அதிகாரி (சிறு வணிகம்), பஜாஜ் ஜெனரல் இன்ஷூரன்ஸ்



மோட்டார் இன்ஷூரன்ஸ்

**எதிர்பாராத சூழலில்** யாருக்கு வேண்டு மானாலும், எப்போது வேண்டு மானாலும் விபத்து நடக்கலாம்; வாகனத் திருட்டு நடக்கலாம். விபத்துகள், திருட்டு, வாகன சேதம் போன்ற எதிர்பாராத நிகழ்வுகளால் ஏற்படும் நிதிச் சுமையைச் சமாளிக்க வாகன உரிமையாளர்களுக்கு உதவும் ஒரு முக்கியமான பாதுகாப்பு ஏற்பாடு வாகனக் காப்பீடு. இந்தக் காப்பீட்டை எடுத்து தொடர்ந்து எந்தக் காப்பீட்டு கோரிக்கையும் (Claim) செய்யாமல் இருப்பவர்களுக்குக் காப்பீட்டு நிறுவனங்கள் ஒரு சிறப்பு சலுகையை வழங்குகின்றன. அந்தச் சலுகையே நோ க்ளெய்ம் போனஸ் (No Claim Bonus – NCB).

இந்த என்.சி.பி என்பது காப்பீட்டு புதுப்பித்தலின்போது பிரீமியத்தில் வழங்கப்படும் தள்ளுபடி. தொடர்ந்து பல ஆண்டுகள் க்ளெய்ம் செய்யாமல் இருந்தால் இந்தத் தள்ளுபடி ஆண்டு தோறும் அதிகரிக்கும். நீண்ட காலத்தில் காப்பீட்டுச் செலவை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கக் கூடிய முக்கியமான நன்மைகளில் இதுவும் ஒன்றாக இருப்பதால், என்.சி.பி மோட்டார் காப்பீட்டின் மிகவும் மதிப்புமிக்க அம்சமாக கருதப்படுகிறது. இந்தச் சலுகை எவ்வாறு கணக்கிடப்படுகிறது என அறிந்து வைத்திருப்பது நல்லது.

**என்.சி.பி என்றால் என்ன?**

ஒரு பாலிசி ஆண்டை எந்தக் காப்பீட்டுக் கோரிக்கையும் செய்யாமல் முழுமையாக நிறைவு செய்யும் பாலிசிதாரருக்கு வழங்கப்படும் வெகுமதியே நோ க்ளெய்ம் போனஸ். இது புதுப்பித்தலின்போது பிரீமியத்தில் தள்ளுபடியாக வழங்கப்படும். க்ளெய்ம் செய்யாத நிலையை ஊக்குவிக்கும் வகையில் இந்தச் சலுகை வழங்கப்படுகிறது.

இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றால், இந்தத் தள்ளுபடி மோட்டார் காப்பீட்டின் 'சொந்த வாகன சேத பாதுகாப்பு (Own Damage)' பிரீமியத்துக்கு மட்டுமே பொருந்தும். மூன்றாம் தரப்பு பொறுப்புக் காப்பீட்டு (Third-Party Liability) பிரீமியத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது. ஏனெனில் அது தனியாக ஒழுங்குபடுத்தப்படும் பிரீமியம்.

தொடர்ச்சியாக க்ளெய்ம் செய்யாமல் இருக்கும் ஆண்டுகள் அதிகரிக்கும்போது என்.சி.பி சதவிகிதமும் அதிகரிக்கும். இதன் மூலம் பாலிசிதாரர்கள் தங்களின் மோட்டார் காப்பீட்டு பிரீமியத்தில் அதிகமான சேமிப்பைப் பெற முடியும்.




**என்.சி.பி எவ்வாறு கணக்கிடப்படுகிறது?**

நோ க்ளெய்ம் போனஸ் என்பது ஒரு பாலிசிதாரர் தொடர்ந்து எத்தனை ஆண்டுகள் க்ளெய்ம் செய்யாமல் இருக்கிறார் என்பதன் அடிப்படையில் கணக்கிடப் படுகிறது. ஒவ்வொரு க்ளெய்ம் இல்லாத ஆண்டும், 'ஓன் டேமேஜ்' பிரீமியத்தில் வழங்கப்படும் தள்ளுபடி அதிகரிக்கும். இது பாதுகாப்பான ஓட்டுநர் பழக்கம் மற்றும் பொறுப்பான வாகன உரிமையை ஊக்குவிக்கும் ஒரு முறை.

பொதுவாக, மோட்டார் காப்பீட்டில் என்.சி.பி தள்ளுபடி ஒவ்வோர் ஆண்டும் க்ளெய்ம் செய்யாமல் பாலிசியை புதுப்பித்தால் படிப்படியாக அதிகரிக்கும். முதல் ஆண்டில் எந்த க்ளெய்மும் செய்யாமல் இருந்தால், அடுத்த புதுப்பித்தலில் 20 சதவிகித என்.சி.பி தள்ளுபடி வழங்கப்படும். தொடர்ந்து இரண்டாவது ஆண்டும் க்ளெய்ம் செய்யாமல் இருந்தால், தள்ளுபடி 25 சதவிகிதமாக உயரும். மூன்றாவது ஆண்டும் க்ளெய்ம் செய்யாமல் இருந்தால், என்.சி.பி தள்ளுபடி 35 சதவிகிதமாக அதிகரிக்கும்.

நான்காவது ஆண்டும் தொடர்ந்து க்ளெய்ம் இல்லாமல் இருந்தால், தள்ளுபடி 45 சதவிகிதமாக வழங்கப்படும். ஐந்தாவது ஆண்டும் க்ளெய்ம் செய்யாமல் பாலிசியை புதுப்பித்தால், அதிகபட்சமாக 50 சதவிகித என்.சி.பி தள்ளுபடியைப் பெற முடியும். அதாவது, ஒவ்வோர் ஆண்டும் க்ளெய்ம் இல்லாமல் பாலிசியை தொடர்ந்து புதுப்பித்து வந்தால், என்.சி.பி தள்ளுபடி படிப்படியாக உயர்ந்து, ஐந்தாவது ஆண்டில் அதிகபட்சமான 50 சதவிகிதத் தள்ளுபடியை அடையும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சதவிகிதங்கள் பொருந்தக்கூடிய மோட்டார் காப்பீட்டுக் கட்டண விதிமுறைகள் (Motor Tariff Provisions), பாலிசி நிபந்தனைகள் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தின் நடைமுறைகளுக்கு

**ஓர் எடுத்துக்காட்டு!**

ஒரு வாகனத்தின் ஓன் டேமேஜ் பிரீமியம் ரூ.15,000 என்று வைத்துக்கொள்வோம். பாலிசிதாரர் 20% என்.சி.பி பெற தகுதியுடையவராக இருந்தால் என்.சி.பி தள்ளுபடி ரூ.3,000. பாலிசி புதுப்பித்தலின் போது செலுத்தவேண்டிய ஓன் டேமேஜ் பிரீமியம் ரூ.12,000. இதேபோல், தொடர்ந்து க்ளெய்ம் செய்யாமல் இருக்கும் காலம் அதிகரிக்கும்போது என்.சி.பி சதவிகிதமும் உயரும். இதன் மூலம் ஆண்டுதோறும் பிரீமியத்தில் மேலும் அதிகமான சேமிப்பைப் பெற முடியும். இடையறாத க்ளெய்ம் இல்லாத வரலாறு எவ்வளவு நீண்ட காலம் இருக்கிறதோ, அவ்வளவு அதிகமான பிரீமிய குறைப்பை புதுப்பித்தலின்போது பெற முடியும்.

**தொடர்ந்து க்ளெய்ம் இல்லாத ஆண்டுகள் ஏன் முக்கியம்?**

என்.சி.பி என்பது வாகனத்தின் வயது அல்லது அதை எவ்வளவு காலம் வைத்திருக்கிறோம் என்பதன் அடிப்படையில் நிர்ணயிக்கப் படுவதில்லை. பாலிசிதாரரின் க்ளெய்ம் வரலாறே (Claims History) இதற்கான முக்கிய அடிப்படை. தொடர்ச்சியாக ஒவ்வோர் ஆண்டும் க்ளெய்ம் செய்யாமல் இருப்பது, அதிகமான என்.சி.பி தள்ளுபடியைப் பெறும் தகுதியை வலுப்படுத்துகிறது. இந்த நன்மை படிப்படியாக அதிகரிப்பதால், பாதுகாப்பான வாகனம் ஓட்டும் பழக்கத்தை ஊக்குவிப்பதோடு, நீண்ட காலத்தில் காப்பீட்டுச் செலவையும் கணிசமாகக் குறைக்க உதவுகிறது.

**க்ளெய்ம் செய்தால் என்ன நடக்கும்?**

என்.சி.பி என்பது பாலிசிதாரரின் க்ளெய்ம் வரலாற்றுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. இது காலப்போக்கில் பிரீமியத்தைக் குறைக்க உதவினாலும், பாலிசி காலத்தில் ஓன் டேமேஜ் பிரிவின் கீழ் ஒரு க்ளெய்ம் செய்தால், அடுத்த புதுப்பித்தலின்போது கிடைக்கும் என்.சி.பி பொதுவாக பூஜ்யமாக மாறும். இதன் விளைவாக, தொடர்ந்து க்ளெய்ம் இல்லாமல் இருந்த ஆண்டு களில் சம்பாதித்திருந்த பிரீமியத் தள்ளுபடியை பாலிசிதாரர் இழக்க நேரிடலாம். அதனால்தான் ஓட்டுநர்கள் எப்போதும் கவனமாகவும் பொறுப்புடனும் வாகனம் ஓட்ட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

க்ளெய்ம் இல்லாத வரலாற்றை பராமரிப்பது விபத்துகள் மற்றும் வாகன சேதங்களைத் தவிர்க்க உதவுவதோடு, என்.சி.பி-யையும் பாதுகாத்து, தொடர்ந்து குறைந்த பிரீமியத்தின் நன்மையை அனுபவிக்கவும் வழிவகுக்கிறது.



**என்.சி.பி என்பது பாலிசிதாரருடன் இணைக்கப்பட்ட நன்மை!**

என்.சி.பி-யின் மிக முக்கியமான நன்மைகளில் ஒன்று, அது வாகனத்துடன் அல்ல, பாலிசிதாரருடன் இணைக்க ப்பட்டிருப்பது. அதாவது, ஒரு பாலிசிதாரர் புதிய வாகனம் வாங்கினாலும் அல்லது வேறு காப்பீட்டு நிறுவனத்துக்கு மாறினாலும், அவர் இதுவரை பெற்றிருந்த என்.சி.பி-யை பொதுவாகத் தொடர்ந்து வைத்திருக்க முடியும். இருப்பினும், இது காப்பீட்டு நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

என்.சி.பி மாற்றம் (NCB Transfer) அதே பாலிசிதாரருக்கு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. இதற்காக செல்லுபடியாகும் ஆதாரம், என்.சி.பி பாதுகாப்புக் கடிதம் (NCB Reserving Letter), உரிய அறிவிப்பு (Declaration) மற்றும் காப்பீட்டு நிறுவனத்தின் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

வாகனத்தின் உரிமை வேறு ஒருவருக்கு மாறும்போது, என்.சி.பி பொதுவாக அந்த புதிய நபருக்கு மாற்றப்படாது. எனவே, வாகனம் மாறினாலும் அல்லது காப்பீட்டு நிறுவனம் மாறினாலும், க்ளெய்ம் இல்லாத வரலாற்றின் மூலம் சம்பாதித்த பிரீமியத் தள்ளுபடியைத் தொடர்ந்து பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு பாலிசிதாரருக்குக் கிடைக்கிறது.

**என்.சி.பி ஏன் முக்கியமானது?**

என்.சி.பி என்பது வெறும் பிரீமியத் தள்ளுபடி மட்டுமல்ல. அது பொறுப்பான வாகன உரிமையின் அங்கீகாரம் மற்றும் க்ளெய்ம் இல்லாத வரலாற்றுக்கான வெகுமதி. க்ளெய்ம் வரலாற்றுடன் பிரீமிய நன்மைகளை இணைப்பதன் மூலம், காப்பீட்டு நிறுவனங்கள் பாதுகாப்பாக வாகனம் ஓட்டும் பழக்கத்தை

ஊக்குவிக்கின்றன. அதே நேரத்தில், பாலிசிதாரர்கள் தங்களின் காப்பீட்டு செலவைக் குறைக்கவும் உதவுகின்றன.



தொடர்ந்து க்ளெய்ம் இல்லாத ஒவ்வோர் ஆண்டிலும் என்.சி.பி அதிகரிப்பதால், அதன் மூலம் கிடைக்கும் சேமிப்பு காலப்போக்கில் கணிசமான அளவை அடையக்கூடும். எனவே, மோட்டார் காப்பீட்டின் மொத்தச் செலவை மதிப்பிடும்போது என்.சி.பி ஒரு முக்கியமான காரணியாகக் கருதப்பட வேண்டும்.

க்ளெய்ம் இல்லாத ஆண்டுகள் அதிகரிக்கும்போது என்.சி.பி தள்ளுபடியும் அதிகரிப்பதால், புதுப்பித்தல் பிரீமியத்தில் குறிப்பிடத்தக்க அளவிலான சேமிப்பைப் பெற முடியும். என்.சி.பி எவ்வாறு கணக்கிடப்படுகிறது, க்ளெய்ம் செய்தால் அது எவ்வாறு பாதிக்கப்படுகிறது, மேலும் அதை எவ்வாறு பாதுகாத்து அல்லது மாற்றிக் கொள்ளலாம் என்பதைப் புரிந்துகொள்வது, பாலிசிதாரர்கள் சிறந்த காப்பீட்டு முடிவுகளை எடுக்க உதவுகிறது.

பாதுகாப்பாக வாகனம் ஓட்டுவது, நல்ல க்ளெய்ம் வரலாற்றைப் பராமரிப்பது மற்றும் பாலிசியை காலத்துக்குள் அல்லது அனுமதிக்கப்பட்ட தொடர்ச்சி காலத்துக்குள் புதுப்பிப்பது போன்ற நடைமுறைகள் மூலம், வாகன உரிமையாளர்கள் என்.சி.பி-யின் முழு நன்மையையும் பெற்று, தங்களின் மோட்டார் காப்பீட்டுச் செலவுகளை மேலும் திறம்பட நிர்வகிக்க முடியும். என்.சி.பி தொடர்பான சலுகைகள், மாற்றத் தகுதி, க்ளெய்ம்களின் தாக்கம் ஆகியவை அனைத்தும் பொருந்தக்கூடிய மோட்டார் காப்பீட்டுக் கட்டண விதிகள், பாலிசி நிபந்தனைகள், அண்டர்ரைட்டிங் (Underwriting) வழிகாட்டுதல்கள் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தின் நடைமுறைகளுக்கு உட்பட்டவையே.